உ

சிவமயம்



# ஸ்ரீ தர்ப்பாரண்யேஸ்வர சுவாமி தேவஸ்தானம்
## ஸ்ரீ சனீஸ்வர பகவான் ஸ்தலம்

திருநள்ளாறு – 609 607.

# சனிப்பெயர்ச்சி விழா

**கடக ராசியிலிருந்து சிம்ம ராசிக்கு 5-8-2007 பகல் 12-19 மணி**

திருநள்ளாறு ஸ்ரீ தர்ப்பாரண்யேஸ்வர சுவாமி தேவஸ்தானம் தென்னகத்திலே புகழ் பெற்ற சிவாலயங்களில் ஒன்றாகும். திருநள்ளாறு ஸ்தலம் காரைக்காலிலிருந்து மேற்கே 5 கி.மீ. தூரத்தில், கும்பகோணம்–மயிலாடுதுறை மார்க்கத்தில் உள்ளது. பழமை வாய்ந்த இந்த சிவாலயம் 7–ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. இக்கோயிலில் ஸ்ரீ தர்ப்பாரண்யேஸ்வரர் மூலஸ்தானம் முதன்மையானது. இவை தவிர, ஸ்ரீ சனீஸ்வர பகவான், ஸ்ரீ பிராணாம்பிகை, ஸ்ரீ தியாகராஜர், ஸ்ரீ விநாயகர் சன்னதிகளும் உள்ளன. இந்த கோயிலானது இந்தியாவில் உள்ள பக்தர்களை மட்டுமின்றி மற்ற நாடுகளில் உள்ள பக்தர்களையும் கவர்ந்து ஈர்க்கின்றது. திருநள்ளாற்றில் மட்டுமே ஸ்ரீ சனீஸ்வர பகவானுக்கு தனி சன்னதி அமைந்துள்ளது. இங்கு ஸ்ரீ சனீஸ்வர பகவான் அபய ஹஸ்தத்துடன் அனுக்கிரக மூர்த்தியாக அருள்புரிகிறார். இக்கோயிலின் வரலாற்றுப்படி புராண பிரசித்தி பெற்ற நளமகாராஜன் ஸ்ரீ தர்ப்பாரண்யேஸ்வரரை வழிபட்டு, ஸ்ரீ சனீஸ்வர பகவானின் அனுக்கிரகத்தால் துன்பங்கள் யாவும் நீங்கப்பெற்று பகவானின் அனுக்கிரகம் கிடைக்கப்பெற்றார் என்பது ஐதீகம்.

## சனிப்பெயர்ச்சி விழா

நவக்கிரகங்களில் ஸ்ரீ சனீஸ்வர பகவான் ஒரு முக்கிய அங்கம் வகிக்கிறார். அவரை வணங்குவதன் மூலம் ஒருவரது ஜாதகத்தில் சனியினால் ஏற்படும் தோஷங்களும் துன்பங்களும் குறைவதாக ஐதீகம். வானவியலின்படி, ராசி மண்டலத்தில் ஸ்ரீ சனீஸ்வரர் 2 ½ வருடங்களுக்கு ஒருமுறை ஒரு இராசியிலிருந்து மற்றொரு ராசிக்கு இடம் பெயருகிறார். அந்த நாள் திருநள்ளாற்றில் சனிப்பெயர்ச்சி விழாவாக கொண்டாடப்படுகிறது. சனிப்பெயர்ச்சி விழாவில் இறைவழிபாட்டு நிகழ்ச்சிகள், நடைபெறுகின்றன. சனிப்பெயர்ச்சி விழா நாளில் திருமுறைகள் பாடப்படுகின்றன. ஸ்ரீ சனீஸ்வர பகவானுக்கு அன்றைய தினம் மிகப்பெரிய அளவில் அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். எண்ணெய், பால், தயிர், பன்னீர், இளநீர், பஞ்சாமிர்தம் ஆகியன அபிஷேகத்தின்போது பயன்படுத்தப்படுகின்றன.

சனிப்பெயர்ச்சி விழாவின்போது தங்க காக வாகனத்தில் ஸ்ரீ சனீஸ்வர பகவானை பக்தர்கள் தரிசனம் செய்வதற்குண்டான ஏற்பாடுகள் செய்யப்படுகிறது. சனிப்பெயர்ச்சி நாளன்று சிறப்பு அபிஷேகமும், சகஸ்ரநாம அர்ச்சனையும் கீழ்க்கண்ட கட்டணம், செலுத்துவோர் பெயரில் செய்யப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 1. | சனிப்பெயர்ச்சி விழாவின்போது அபிஷேகம் செய்ய | ரூ. 150-00 |
| 2. | சனிப்பெயர்ச்சி விழாவின்போது சகஸ்ரநாம அர்ச்சனை செய்ய | ரூ. 100-00 |

சனிப்பெயர்ச்சி விழா 5-8-2007 பகல் 12-19மணிக்கு நடைபெறுகின்றது. இம்முறை ஸ்ரீ சனீஸ்வர பகவான் கடக ராசியிலிருந்து சிம்ம ராசிக்கு இடம் பெயருகிறார்.

இதர தகவல்கள் விரும்புவோர் திருநள்ளாறு ஸ்ரீ தர்ப்பாரண்யேஸ்வர சுவாமி தேவஸ்தான நிர்வாக அதிகாரியை நேரிலோ அல்லது தொலைபேசியின் மூலமாகவோ தொடர்பு கொள்ளலாம்.


Office : (04368) 236530
Fax : (04368) 236504
E-mail : ~~sds@kkl.pon.nic.in~~
Resi : 225524 sds.kkl@nic.in

**வை. கிருஷ்ணசாமி,**
தனிஅதிகாரி / நிர்வாக அதிகாரி (கோயில்கள்)


**குறிப்பு :**

ஸ்ரீ சனீஸ்வர பகவானுக்கு அர்ச்சனைகள் மற்றும் பூஜை செய்ய விரும்புவோர் மணியார்டர் அல்லது வரைவோலை மூலமாக உரிய தொகையினை நிர்வாக அதிகாரி ஸ்ரீ தர்ப்பாரண்யேஸ்வர சுவாமி தேவஸ்தானம், திருநள்ளாறு – 609 607 என்ற முகவரிக்கு நேரடியாக அனுப்பி வைக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். வேறு வெளி நபர்களுக்கு அனுப்பவேண்டாம் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.


காரைக்கால் மகளிர் கூட்டுறவு அச்சக சங்கம்